# ஆய்வு நோக்கில்

# தமிழ்க் கலையும் கலாச்சாரமும்

## தேசியக் கருத்தரங்கம்




பதிப்பாசிரியர்கள்

முனைவர் சி.ஆன்சிமோள்

முனைவர் ம.மேபல் எடல் குயின்

முனைவர் சா.டெய்சி பாய்

முனைவர் ம.ஜாஸ்மின் வினோஜா



தமிழ்த்துறை (சுயநிதி)

ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி)

நாகர்கோவில் – 629004

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | : ஆய்வு நோக்கில் தமிழ்க் கலையும் கலாச்சாரமும் Aayvu Nokkil Thamizh Kalaiyum Kalacharamum |
| Editors | : Dr S. Ancy Mole<br>Dr M.Mabel Edel queen<br>Dr S.Daisy Bai<br>Dr M.Jasmine Vinoja |
| Publisher | : Masivan Pathippagam<br>III/199. A.Gudalur,<br>Ayandur, Kandachipuram TK<br>Villupuram - 605755<br>Ph: 9486069548 |
| Publication No. | : 69 |
| Language | : Tamil |
| Edition | : Edition - I, September - 2024 |
| Paper Used | : 18.6 Kg TNPL Maplitho NS |
| Size of the Book | : 1/8 Demy |
| Printing type used | : 11 Point |
| No. of Pages | : X + 191 |
| No. of Copies | : 100 |
| Price | : Rs 200/- |
| Printed By | : Masivan Printers, Villupuram. |
| Subject | : Tamil – Research Articles |
| ISBN | : 978-93-92020-80-3 |
| Copyright | : Editors |

பொருளடக்கம்


1. நெடுநல்வாடையில் கலைகள்

முனைவர் சு.ஏஞ்சல் ஜெயலெட்ராணி 01

2. கன்னியாகுமரி மாவட்ட சலவைத்தொழிலாளர்களின் பண்பாடு

முனைவர் மா.தே.அருண் மொழி நங்கை 12

3. சோழர் காலத்துக் கலைகள்

முனைவர் நா.ஐயப்பன் 21

4. இலக்கியங்களில் காணலாகும் அணிகலன்கள்

முனைவர் அ.பொன்னம்மாள் 27

5. நாட்டுப்புறப் பாடல்களும் திருத்தப் பதிப்பும்

முனைவர் வை.சொர்ணலதா 32

6. முல்லை நிலச் சூழலும் உணவுப் பண்பாடும்

முனைவர் சு. அரங்கநாதன் 37

7. கூத்துக் கலையின் மரபும் நீட்சியும்

சு.கோபாலகிருஷ்ணன் 46

8. இமையத்தின் செடல் நாவலில் பண்பாடு

முனைவர் பா.இங்கிரீட் போவிங், மி.மாலினி 55

9. நலிந்து வரும் குமரி மாவட்ட நெய்தல் நில விளையாட்டுகள்

அ.சகாய சுசி, முனைவர் சு.இளமாறன் 61

10. மதுரைக்காஞ்சியில் உடைகள், அணிகலன்கள்

முனைவர் கா.சந்தானலெட்சுமி 71

11. சிலம்பக் கலையின் வகைகளும் அடவுமுறைகளும்

முனைவர். ப.செந்தில் முருகன் 78

12. பத்துப்பாட்டு நூல்கள் காட்டும் தமிழரின் கட்டிடக்கலை

சூ.ஆட்லின் ஜெமி லியோன் 85

13. கிறித்தவ நாடகத்தில் தமிழர் பண்பாடும் தமிழ்க் கலாச்சாரமும்

அந்தோணி ஆக்னஸ்.அ

முனைவர் லீமா மெட்டில்டா.அ 91

# கன்னியாகுமரி மாவட்ட சலவைத்தொழிலாளர்களின் பண்பாடு

முனைவர் மா.தே.அருண் மொழி நங்கை
தமிழ்த்துறை,
ஹோலி கிராஸ் கல்லூரி,
நாகர்கோவில்.

## முகவுரை

மனிதன் தான் வாழும் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வான். மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்தான். இயற்கை வளங்களைத் தன்சொந்தத் தேவைக்காக அழித்து வாழ்ந்து வந்தான். ஒரு சமூக மக்களின் பண்பாட்டை அறிய வேண்டுமாயின் அம்மக்கள் பயன்படுத்தும் கூறுகளில், பொருட்களின் பண்பாட்டை அறிய வேண்டிய தேவை ஏற்படுகிறது. சலவைத் தொழிலாளர்களின் உணவு முறை, புழங்கு பொருட்கள், கலைகள் முதலியன பற்றி இவ்வியல் ஆராய்கிறது. கலைகள் மனிதன் தோன்றிய காலம் முதல் தோன்றியது. பகலில் உழைத்துக் களைத்தவர்கள் இரவில் பொழுது போக்கிற்காக கூத்து, பொம்மலாட்டம், நாடகங்கள் முதலியவற்றை நடத்தினர். இன்றும் பொழுது போக்கிற்கு மக்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். சலவைத் தொழிலாளர்களிடையேயும் பொழுது போக்குக் கலைகள் இருப்பதைக் காண முடிகிறது.

## பண்பாடு

பண்பாடு என்பது அனைத்துச் சமுதாய மக்களுக்கும் பொதுவாகக் காணப்படும் நெறிமுறையாகும். ஒரு சமுதாயத்தில் காணப்படும் பழக்கவழக்கங்கள் அனைத்தும் பண்பட்ட நிலையில் காணப்படுவதே பண்பாடாகும். நாகரிகம் வளர்ச்சியடைந்து அதிலுள்ள குற்றங்குறைகள் அனைத்தும் களைந்த பின்னர் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தகும் வகையில் ஒரேவித பழக்கவழக்கமாக, நாகரிகமாக உருவாக்குவதே பண்பாடு எனப்படும். எந்த ஒரு சமுதாயத்தோடும் ஊறிய நிலையில் காணப்படும் பழக்கவழக்கங்களைப் பண்பாடு என்று கூறலாம். சாதிக்குச் சாதி, மதத்திற்கு மதம் இந்தப் பண்பாடு வேறுபடுகின்றது. உணவு, உடை, அணிகலன்கள், பாடல்கள், கலைகள் இம்மக்களின் பண்பாட்டினை வெளிப்படுத்துகின்றன.

## சலவைத் தொழிலாளர்களின் பண்புகள்

சலவைத் தொழிலாளர்கள் அனைத்துச் சமுதாய மக்களுடனும் நெருங்கிப் பழகுகின்றனர். பிற சமுதாயத்தினரின் இல்லத் திருமணம் மற்றும் அனைத்துச் சடங்குகளிலும் கலந்து கொள்கின்றனர். பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றை வாய்வழியாகத் தம் தலைமுறைகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்றனர். கேள்வி ஞானத்துடன் வளரும் பிள்ளைகள் சிலவற்றை மறந்து விடுகின்றனர். வீடுகளில் ஓய்வாக இருக்கும் போது விடுகதை போட்டு மகிழ்கின்றனர். பேச்சின் இடையில் பழமொழிகளைக் கூறி மகிழ்கின்றனர்.

## ஐந்நில மக்கள் உணவு

பழந்தமிழரின் சமுதாயத்தில் மக்கள் பாகுபாடு நிலத்தின் அடிப்படையிலும், தொழிலின் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டிருந்தன. குறிஞ்சி நிலங்களில் வாழ்ந்தோர் குறவர், குறத்தியர் எனவும், முல்லை நிலங்களில் வாழ்ந்தோர் ஆயர், ஆய்ச்சியர் எனவும், மருத நிலங்களில் வாழ்ந்தோர் உழவர், உழத்தியர் எனவும், நெய்தல் நிலங்களில் வாழ்ந்தோர் பரதவர், பரத்தியர் எனவும் அழைக்கப்பட்டனர்.

### குறிஞ்சி

தினையே குறிஞ்சி நிலத்தில் விளையும் முக்கிய தானியம் ஆகும். குறிஞ்சி நிலத்து உணவு பற்றி மலைபடுகடாம்,

**'தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ**
**ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை" - மலைபடு.425**

என்று கூறுகிறது. குறிஞ்சிப் பாட்டின் வரிகளும்,

**'பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்**
**வசைஇல் வான்தினைப் புரையோர் கடும்பொடு**
**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்" - குறிஞ்சி. 204**

என்று கூறுகிறது. தேனையும், கிழங்கையும் பிற நிலத்தார்க்கு விற்று மீன், நெய், நறவு போன்ற உணவுப் பொருட்களை வாங்கிச் சென்று அதனை உணவாகக் குறிஞ்சி நில மக்கள் பயன்படுத்தினர்.

### முல்லை

தினையரிசிச் சோறு, பால், தயிர், மோர், நெய், வான்கோழி,

இறைச்சி, முயல் இறைச்சி, மான் இறைச்சி முதலியவை இவர்களது முக்கிய உணவாக இருந்தன. இவர்களது உணவு பற்றிய குறிப்பினை,

**'மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி**
**இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன**
**பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்" - பெரும்பா. 166**

என்று பெரும்பாணாற்றுப் படை தருகிறது.

முல்லை நிலச் சிற்றூர்களில் இருந்தவர்கள் வரகரிசிச் சோறும், அவரைப் பருப்பும் கலந்து செய்த 'கும்மாயம்' எனப் பெயர் பெற்ற உணவை உண்டனர் என்பதனை,

**'நெடுங் குரல் பூளைப் பூவின் அன்ன**
**குறுந் தாள் வரகின் குறள் அவிழ்ச் சென்றி**
**புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன**
**அவரை வான் புழுக்கு அட்டி -பெரும்பா. 191**

என வரும் பெரும்பாணாற்றுப் படை பாடல் வரியிலிருந்து உணர முடிகிறது.

**மருதம்**

உழவுத்தொழில் சிறந்து, உணவும் பிறவும் நிறையப் பெற்றவர்கள் மருத நிலத்து மக்களாவர். இவர்களது சிறந்த உணவாகச் செந்நெல்லும், வெண் நெல்லும் இருந்தன. இதனை,

**'வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி**
**மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவீர்" - பெரும்பா.255**

என்ற பெரும்பாணாற்றுப்படைப் பாடலாலும்,

**'அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு**
**கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்" - சிறுபா.194**

என்ற சிறுபாணாற்றுப் படைப் பாடலாலும் அறிய முடிகிறது. மருதநிலம் நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணையாகும்.

**நெய்தல்**

நெய்தல் நிலமக்கள் மழைக் கடவுளைத் தெய்வமாகக் கொண்டவர்கள். மீன்களைப் பிடித்தல், அவற்றை உலர்த்துதல், உப்பை விளைவித்தல், மீனையும் உப்பையும் விற்றல் முதலிய

தொழில்களை மேற்கொண்டனர். இவர்களின் முக்கிய உணவு மீன் மற்றும் கடல் உயிரினங்கள். இதனைப் பட்டினப்பாலை,

**'மீன் தடிந்து, விடக்கு அறுத்து**
**ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்''- பட்டின.177**

என்று கூறுகிறது.

**பாலை**

பாலை நிலத்து மக்கள் மான் இறைச்சியையும், வெண் சோற்றையும் உணவாகக் கொண்டவர்கள்.

**'எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆயமோடு**
**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்' -சிறுபா.175**

என்று பாலை நிலத்து மக்களைச் சிறுபாணாற்றுப்படை குறிக்கிறது.

**உணவு முறை**

உணவுப் பழக்கம் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபடுகிறது. உணவு உடல் வளர்வதற்கு இன்றியமையாததாகும். உணவு முறை இச்சமுதாயத்தவரிடம் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது. காலையில் நீராகாரம் அருந்துகின்றனர். மதியம் முந்தின நாள் இரவில் வைத்தச் சோற்றை உண்கின்றனர். சாயங்காலம் இரவிற்கான சோறு சமைக்கின்றனர். குழந்தைகள் மதிய உணவைப் பள்ளிக் கூடத்தில் சாப்பிடுகின்றனர். கூட்டுக்கு மதியம் ஊறுகாய், மீன் வைக்கின்றனர். செவ்வாய், வெள்ளி நாட்களில் மீன் வாங்குவதில்லை. அன்றைய தினங்களில் காய்கறியில் கூட்டு வைக்கின்றனர்.

சலவைத் தொழிலாளர்களின் உணவுப் பழக்கமானது எளிய நிலையில் அமைந்துள்ளது. தங்களைச் சுற்றிக் கிடைக்கின்ற உணவு பொருட்களை உண்ணும் பழக்கம் உள்ளவர்களாக விளங்குகின்றனர். இவர்கள் சைவ, அசைவ உணவு உண்ணும் பழக்கம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். சைவ உணவாகக் கேழ்வரகு களி, கூழ், கம்பு கூழ்,சோளக் கூழ், நெல்லரிசிச் சோறு, கீரைகள், கத்தரிக்காய், வெண்டைக்காய், கிழங்குகள், பனம்பழம், நுங்கு, கருப்பட்டி, வெல்லம் முதலியனவற்றையும், தினை,வரகு,சாமை முதலான தானிய வகைகளையும், துவரை, மொச்சை, தட்டை, கடலை முதலான பயறு வகைகளையும் உண்ணும் பழக்கமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அசைவ உணவு என்று பார்த்தால் ஆட்டிறைச்சி,

கோழியிறைச்சி, மாட்டிறைச்சி, மீன், கருவாடு, இறால், நண்டு முதலானவற்றை உண்ணும் பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

### சிறப்பு உணவு முறை

பண்டிகை நேரங்களில் சிறப்பு உணவுகளைத் தயார் செய்கின்றனர். உணவு பெரும்பாலும் அவர்களுடைய பொருளாதார நிலையைப் பொறுத்து அமைகிறது. பண்டிகைக் காலங்களில் பண்டச் சீட்டு மூலம் பலகாரங்கள் வாங்குகின்றனர். காலையில் தோசை, ஆப்பம், பொங்கல் போன்றவற்றில் ஏதாவது ஒன்றைச் செய்து உண்ணுகின்றனர். மதியம் சோறுடன் இறைச்சியும் சேர்த்துக் கொள்கின்றனர். கோவில் திருவிழா நடைபெறும் காலங்களில் காய்கறி உணவை உண்ணுகின்றனர். தெய்வத்திற்குப் படைக்கும் வடை, வாழைப்பழம் முதலியவற்றை விரும்பி உண்ணும் பழக்கம் காணப்படுகிறது. பண்டிகைக் காலங்களில் இவ்வினமக்கள் துணி துவைத்துக் கொடுக்கும் வீடுகளுக்குச் சென்று உணவு வாங்கும் பழக்கம் உண்டு. ஆனால் தற்சமயம் இப்பழக்கம் நடைமுறையில் இல்லை. உணவைப் பல்வேறு வகையில் தயார் செய்கின்றனர். அவை,

1. **நீரிலிட்டு அவித்தல்**
2. **ஆவியில் வேக வைத்தல்**
3. **வறுத்தல்**
4. **எண்ணெயிலிட்டுப் பொரித்தல்**
5. **வற்றலாக்குதல்**
6. **தீயிலிட்டுச் சுடுதல்**

### நீரிலிட்டு அவித்தல்

அரிசி, கிழங்கு, பருப்பு, காய்கறிகள், பயறு வகைகள், இறைச்சி, முட்டை ஆகியவற்றை நீரிலிட்டு அவித்துப் பல முறைகளில் மசாலா போன்றவற்றைப் போட்டு சுவையாக்கி உண்ணுகின்றனர்.

### ஆவியில் வேக வைத்தல்

இட்லி, புட்டு, இடியாப்பம், கொளுக்கட்டை போன்றவைகளை ஆவியில் வேக வைத்து உண்ணுகின்றனர். பண்டிகைக் காலங்களில் கொளுக்கட்டை தெய்வத்திற்குப் படைக்கும்

முக்கியப் பலகாரமாகும்.

### வறுத்தல்

உளுந்து, சிறுபயறு, பெரும்பயறு போன்றவற்றை வறுத்து உப்புத் தண்ணீர் தெளித்து மாலை நேரத்தில் சிறுவர்களுக்கு கொடுக்கின்றனர். உண்ணக்

### எண்ணெயிலிட்டு பொரித்தல்

மீன், இறைச்சி, முட்டை போன்றவற்றைப் பொரித்து உண்கின்றனர் .அதிரசம், அச்சிமுறுக்கு, பணியாரம், முந்திரிக்கொத்து போன்றவற்றை எண்ணெயில் பொரித்துச் சாப்பிடுகின்றனர். தீபாவளிக்குப் பலகாரங்கள் செய்து உண்கின்றனர்.

### வற்றலாக்குதல்

மரவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு போன்றவற்றைச் சீவி காய வைத்து பொரித்துச் சாப்பிடும் பழக்கம் இவர்களிடம் காணப்படுகிறது. மீதமானச் சோற்றை உரலிலிட்டு ஆட்டி அதனுடன் பருப்பு, மிளகு சேர்த்து வடகம் செய்து காய வைத்துப் பொரித்து உண்ணுகின்றனர்.

### தீயிலிட்டுச் சுடுதல்

மரவள்ளிக் கிழங்கு, கருவாடு முதலியவற்றை அடுப்பிலிட்டுச் சுட்டு சாப்பிடுகின்றனர். சாப்பிடுகின்றனர். சில நேரங்களில் அப்பளத்தையும் சுட்டுச்

### திருவிழா நேரங்களில் உணவு முறை

திருவிழா நேரங்களில் எல்லோரும் விரும்பி உண்ணும் வகையில் உணவு தயாரிக்கின்றனர். திருவிழாக்களும் உணவு முறையும் சலவைத் தொழிலாளர்களின் வாழ்வோடு ஒன்றியதாகும்.

### தமிழ் வருடப் பிறப்பு

தமிழக அரசு தமிழ் வருடப் பிறப்பை தை முதல் நாள் என 2009-ஆம் ஆண்டு முதல் அறிவித்தது. ஆனாலும் சலவைத் தொழிலாளர்கள் சித்திரை முதல் நாளைத் தமிழ் வருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தமிழ் வருடப் பிறப்பன்று புத்தாடை அணிந்து வீட்டில் பலவிதமான பலகாரங்கள் செய்கின்றனர். பணியாரம், அதிரசம் போன்ற பலகாரங்கள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன.

புழங்குபொருட்கள்:

பாத்திரங்கள்

சமைக்கவும், சமையல் பொருட்களை வைக்கவும், சமைத்த உணவை உண்ணவும், குடிக்கவும் பாத்திரங்கள் பயன்படுகின்றன.

தட்டு

சலவைத் தொழிலாளர்கள் சமைத்த உணவைச் சாப்பிடவும், சமைக்க உபயோகப்படுத்தும் பாத்திரங்களை மூடி வைக்கவும் பித்தளை, சில்வர் போன்ற பயன்படுத்துகின்றனர். உலோகங்களால் செய்யப்பட்ட தட்டுகளைப் பயன்படுத்துகின்றனர்.

அகப்பை

தேங்காய் சிரட்டையில் துளையிட்டு அதில் மூங்கில் குச்சியை பொருத்தி அதைக் கரண்டியாகப் பயன்படுத்துகின்றனர். சில்வர் கரண்டியையும் பயன்படுத்துகின்றனர். பானையில் இருந்து சோறு எடுக்கவும், கூட்டு,கறி எடுக்கவும் அகப்பை, கரண்டியைப் பயன்படுத்துகின்றனர்.

செம்பு

சில்வர், பித்தளை போன்ற உலோகங்களால் செய்யப்பட்ட செம்புகளை உபயோகிக்கின்றனர். தண்ணீர் குடிக்கவும், கை கழுவவும் செம்பில் தண்ணீர் பிடித்துப் புழங்குகின்றனர்.

பூசைப் பொருட்கள்

சலவைத் தொழிலாளர்களின் வீடுகளில் பூசைக்குரிய பொருட்களாக திருநீறுதட்டு, பித்தளையால் செய்யப்பட்ட குத்து விளக்கு, கடவுளர்களின் புகைப்படம் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

தொழில் கருவிகள்

வெள்ளாவி அடுப்பு, பானை, தப்புக்கல், உவர்மண், செங்கோட்டை காய், கோடிப் பொடி, சலவைச் சோடா, காரம், நீலம், இஸ்திரிப் பெட்டி, கரிப்பானை, துணி ஊறவைக்கும் பானை ஆகியவற்றைத் தொழில் கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர்.

சேரமான் பெருமான் நாயனார் வரலாற்றில் வண்ணார்

உவர்மண் பொதி சுமந்து வந்தான். அப்போது மழை பெய்தது. மழை நீரில் நனைந்ததால் உவர் மண் கரைந்து உடல் முழுவதும் வழிந்தும், வெயிலில் அம்மண் காய்ந்ததால் வெண்ணிறமாகியும் அவன் முழுநீறு பூசிய அடியவர் போலக் காட்சி அளித்தான். அவனைக் கண்ட சேரர்கோ சிவனடியார் ஒருவர் எதிரே வருகிறார் எனக் கருதி யானையினின்று இறங்கி அவனை வணங்கினார். அவன் அச்சம் மிகுந்தவனாய் அடியேன் தங்கட்கு அடிமைத்தொழில் புரியும் வண்ணான் என்று கூறக்கேட்டு அடியேன் அடிச்சேரன் அன்புகெழுமிய சிவவேடத்தை நினைப்பித்தீர் வருந்தாது செல்லும் என்று கூறி வழியனுப்பி வைத்து மீண்டும் யானை மீது அமர்ந்து அரண்மனையை அடைந்தார். இதனை நம்பியாண்டா நம்பிகள் திருத்தொண்டர் திரு அந்தாதியில்,

**"மன்னர் பிரான் எதிர் வண்ணான் உடல் உவர் ஊறி நீதார்**
**தன்னர் பிரான்தமர் போல வருதலும் தான் வணங்க**
**என்னா பிரான் அடி வண்ணான் என அடிச் சேரன் எனும்**
**தென்னர் பிரான்கழறிற்றறி வான் எனும் சேரலானே". - 44**

என்று நாற்பத்தி நான்காம் பாடலில் கூறியுள்ளார்.

இப்பாடல் மூலம் உவர்மண்ணைச் சலவைத் தொழிலாளர்கள் தொன்று தொட்டே சலவைத் தொழிலுக்குப் பயன்படுத்தியதை அறியலாம்.

### தூய்மைப்படுத்தும் பொருள்கள்

சலவைத் தொழிலாளர்கள் தங்கள் உடலையும், வீடு, பாத்திரங்கள். துணிகள் போன்றவற்றை மிகவும் சுத்தமாக வைத்திருக்கின்றனர். உடல் சுத்தத்தையும், சுற்றுப்புறச் சுத்தத்தையும் பெரிதும் பேணுகின்றனர்.

### உடலைத் தூய்மைப்படுத்தும் பொருட்கள்

உடலைத் தூய்மைப்படுத்த சோப்பு, சீயக்காய், எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். பற்களைச் சுத்தம் செய்ய உமிக்கரியைப் பயன்படுத்துகின்றனர். தற்போது கடையில் கிடைக்கும் பற்பொடி, பற்பசை போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். கடைகளில் சென்று முடி வெட்டிக் கொள்கின்றனர். முகச் சவரம் செய்கின்றனர்.

## முடிவுரை

சலவைத் தொழிலாளர்களின் பண்பாட்டுக் கூறுகளும், கலைகளும் என்னும் இயலில் சலவைத் தொழிலாளர்களின் உணவு முறை, அவர்களின் அணிகலன்கள், அவர்கள் பயன்படுத்தும் பாத்திரங்கள், தொழிற் கருவிகள், தூய்மைப்படுத்தும் பொருட்கள். படுக்கையறைப் பொருட்கள் போன்றவற்றைப் பற்றி ஆராயப்பட்டுள்ளன. நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டுப் பாடல்கள் மற்றும் விளையாட்டுப் பாடல்கள் ஆராயப்பட்டுள்ளன. கலைகளில் சிலம்பம், கோலாட்டம், கும்மி, விளையாட்டு, கோலம் போடுதல் போன்றவை ஆராயப்பட்டுள்ளன. சலவைத் தொழிலாளர்களின் வசதிக்கேற்ப உடை, அணிகலன்களை அணிகின்றனர். உணவும் அவர்களின் கலாச்சாரத்திற்கும், தொழிலுக்கும் ஏற்புடையதாக அமைகிறது. அவர்களின் வீட்டில் பயன்படுத்தும் பாத்திரங்கள், தூய்மைப்படுத்தும் பொருட்கள் போன்றவைகளும் அவர்களின் வசதிக்கேற்பவே அமைகின்றன. சேர்ந்து விளையாடும் போது மகிழ்ச்சியுடன் பாடுகின்றனர். சில நேரங்களில் விளையாட்டு வினையாவதும் உண்டு. கேலிப் பாடல்கள் பாடும் போது சில நேரங்களில் உருண்டு புரண்டு சண்டையிடுகின்றனர். சிலம்பம், வில்லுப்பாட்டுப் போன்ற கலைகளைச் சிலர் தொழிலுக்காகச் செய்கின்றனர். மற்றக் கலைகளைக் குழந்தைகள் பள்ளிக் கூடங்களில் கலை நிகழ்ச்சியாக நிகழ்த்துகின்றனர். கலைகள் மெல்ல மெல்ல அழியும் நிலையில் உள்ளன.

## துணைநூற்பட்டியல்:


1. குறிஞ்சிப்பாட்டு, சோமசுந்தரனார்,பொ.வே.,1970,முதற்பதிப்பு, கழக வெளியீடு, சென்னை.
2. சங்கத் தமிழர் வாழ்வியல், நீலகண்ட பிள்ளை,தா.,2012, முதற்பதிப்பு,செம்மூதாய் பதிப்பகம், சென்னை.
3. சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்,மாதையன்,பெ.,2010, இரண்டாம் பதிப்பு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. பதிற்றுப்பத்து, துரைசாமிப்பிள்ளை,சு.,1968, ஐந்தாம் பதிப்பு, கழக வெளியீடு, சென்னை.
5. தமிழ் இலக்கிய வரலாறு, சுயம்பு,பெ.,2015,பாரதி பதிப்பகம், திசையன்விளை.

**ஹோலிகிராஸ் கல்லூரி (தன்னாட்சி)**

**நாகர்கோவில் – 629004**






978-93-92020-80-3

Rs. 200/-

Masivan Pathippagam
III/199. A.Gudalur,Ayandur Post,
Kandachipuram TK,
Villupuram - 605755
+91 94860-69548
editor@masivanpathippagam.com